தவெக ஆதரவுக் கட்சிகள் கூட்டத்தில் பங்கேற்கவில்லை

இடதுசாரிகள் அறிவிப்பு

சென்னை, செப். 8: சென்னையில் புதன்கிழமை (செப்.9) நடைபெறவுள்ள தவெக ஆதரவுக் கட்சிகளின் 2-ஆவது ஆலோசனை கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் பங்கேற்கவில்லை எனத் தெரிவித்துள்ளன.

தவெக ஆதரவுக் கட்சிகள் பங்கேற்கும் 2-ஆவது ஆலோசனைக் கூட்டம் சென்னையில் புதன்கிழமை (செப்.9) நடைபெறவுள்ளது. இந்தக்கூட்டத்தில் பங்கேற்க வேண்டும் என தவெக அமைச்சர்கள் இடதுசாரி கட்சிகளின் மாநிலச் செயலர்களை நேரில் சந்தித்து அழைப்பு விடுத்தனர். அப்போது, கட்சியின் மாநிலக் குழு கூட்டத்தில் விவாதித்து முடிவு தெரிவிக்கப்படும் என தவெக அமைச்சர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி,, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு கூட்டம் சென்னை தியாகராய நகரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, அந்தக் கட்சியன் மாநிலச் செயலர் பெ.சண்முகம் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இடைத்தேர்தல், உள்ளாட்சித் தேர்தல், மக்களவைத் தேர்தல் குறித்துப் பேச தவெக தரப்பில் எங்களை அழைத்தனர். புதிய கூட்டணியை உருவாக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது. கட்சியின் மாநிலக் குழு கூட்ட முடிவின்படி தவெக ஆதரவுக் கட்சிகள் கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பங்கேற்காது. மக்கள் நலன் சார்ந்த பிரச்னைகள் குறித்து அரசுக்கு ஆலோசனைகளை வழங்குவோம்.

'மிசா வரலாறை அமைச்சர்கள் படிக்க வேண்டும்': காவல் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் முதல்வர் சம்பந்தமில்லாமல் பேசியுள்ளார். நினைத்ததை எல்லாம் சட்டப்பேரவையில் பேசுவோம் என்ற முறையில் பேசுவதை நாங்கள் ஏற்கவில்லை. மிசா கைது பற்றி அமைச்சர் நிர்மல்குமார் பேசியது சிறுபிள்ளைத்தனமானது. மிசா சிறைக் கொடுமைகள் குறித்த வரலாற்றை தவெக அமைச்சர்கள் படிக்க வேண்டும் என்றார் அவர்.

இந்திய கம்யூனிஸ்ட்: இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழுக் கூட்டம் சென்னை தியாகராய நகரில் உள்ள பாலன் இல்லத்தில் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து அந்தக் கட்சியின் மாநிலச் செயலர் மு.வீரபாண்டியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தவெக ஆதரவுக் கட்சிகள் கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பங்கேற்காது.

மேலும், மதச்சார்பின்மை நீடிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், வெளியில் இருந்து தவெக அரசுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவு தொடரும் என்றார்.

தவெக ஆதரவுக் கட்சிகளின் முதலாவது கூட்டத்திலும் இவ்விரு கட்சிகளும் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அரசுக்கு ஆதரவு தொடருமா?: உறுதியாகச் சொல்ல முடியாது

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் பெ.சண்முகம் கூறியதாவது: தவெக அரசுக்கு வெளியில் இருந்து எங்களது ஆதரவு தொடரும். அதேவேளையில், 5 ஆண்டுகள் ஆதரவு கொடுப்போம் என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது. தவெகவின் நிலைப்பாட்டை பொருத்து ஆதரவு அளிப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என்றார் பெ.சண்முகம்.

அரசுப் பேருந்துகளில் அவசர உதவி பொத்தான்

அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் அறிவிப்பு

சென்னை, செப். 8: அரசுப் பேருந்து பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், பேருந்துகளின் நிகழ்நேரக் கண்காணிப்பை மேம்படுத்தவும் ரூ.17.99 கோடியில் வாகன இருப்பிட கண்காணிப்பு கருவி மற்றும் அவசர உதவி பொத்தான்கள் பொருத்தப்படும் என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் தெரிவித்தார்.

அந்தத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது அமைச்சர் வெளியிட்ட புதிய அறிவிப்புகள்:

- நிலுவையில் உள்ள 5,665 மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு வழக்குகளுக்கு ரூ.500.67 கோடியில் விரைவில் தீர்வு காணப்படும்.
- 35.03 ஏக்கர் பரப்பளவில் உள்ள பேருந்து பணிமனைகள் மூலம் ஆண்டுக்கு ரூ.124.28 கோடி பயணக் கட்டணமில்லா வருவாய் கிடைக்க பொது-தனியார் நவீன பயணிகள் வசதி மற்றும் வணிகப் பயன்பாடுகள் உருவாக்கப்படும்.
- சாலைவிபத்துகள், உயிரிழப்புகளைத் தடுக்க 10,524 புறநகர் பேருந்துகளின் இருபுறங்களின் பக்கவாட்டு பாதுகாப்பு அரண்கள் ரூ.15.79 கோடியில் பொருத்தப்படும்.
- 10,717 பணிமனை தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு பிஎஸ்-6, சிஎன்ஜி, மின்சார பேருந்துகளின் பராமரிப்பு, பழுது கண்டறிதல் பயிற்சி அளிக்கப்படும்.
- பள்ளி நேரத்துக்கு ஏற்ப போக்குவரத்து வசதி இல்லாத கிராமப்புற, மலை, உட்புற பகுதிகளில் 140 பள்ளிகளைச் சேர்ந்த 19,000 மாணவர்கள் பயனடையும் வகையில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும்.
- சிங்காரச் சென்னை தேசிய பொதுப் போக்குவரத்து அட்டை திட்டம் தமிழகம் முழுவதும் விரிவாக்கம் செய்யப்படும்.
- திண்ணை - சாலைப் பாதுகாப்பு தொடர்பான செயற்கைத் தள பயிற்சி அறிமுகம் செய்யப்படும்.

வாழ்த்து...

சட்டப்பேரவை கூட்டத்தொடர் செவ்வாய்க்கிழமை நிறைவுபெற்றதையொட்டி, தலைமைச் செயலகத்தில் பேரவைத் தலைவர் ஜே.சி.டி.பிரபாகருக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்த அமைச்சர்கள் கே.ஏ.செங்கோட்டையன், ராஜ்மோகன், பெ.விஸ்வநாதன்.

இடைத்தேர்தல் புறக்கணிப்பா?

மு.க.ஸ்டாலின் இன்று முக்கிய ஆலோசனை

சென்னை, செப். 8: மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இரு தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதில் போட்டியிடலாமா? அல்லது புறக்கணிக்கலாமா? என்பது தொடர்பாக திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் புதன்கிழமை (செப். 9) முக்கிய ஆலோசனை நடத்த உள்ளார்.

மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. புதன்கிழமை முதல் வேட்புமனு தாக்கல் தொடங்கவுள்ள நிலையில் இடைத்தேர்தலில் திமுக என்ன வகையான நிலைப்பாட்டை எடுக்கலாம் என்பது குறித்து 2-ஆம் கட்ட நிர்வாகிகளுடன் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்த உள்ளார்.

புறக்கணிப்பா? மதுராந்தகம், தாராபுரம் ஆகிய தொகுதிகளில் ஏற்கெனவே அதிமுக வெற்றி பெற்றது. திமுக, தவெக கிட்டதட்ட இணையான வாக்குகளைத்தான் பெற்றிருந்தது. தற்போது தவெக ஆளும்கட்சியாக உள்ள நிலையில், அதிமுக வலுவாக உள்ள இந்தத் தொகுதிகளில் போட்டியிடலாமா? அல்லது புறக்கணிக்கலாமா? என்பது குறித்து முக்கிய முடிவை மு.க.ஸ்டாலின் எடுக்க உள்ளார்.

அண்ணா அறிவாலயத்தில் இதற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

விருப்ப மனு வழங்கலாம்

சென்னை, செப். 8: தமிழகத்தில் இடைத்தேர்தல் நடைபெறவுள்ள மதுராந்தகம், தாராபுரம் ஆகிய தனித் தொகுதிகளில் போட்டியிட விரும்பும் அதிமுகவினர் அதற்கான படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து வழங்கலாம் என கட்சியின் பொதுச் செயலர் எடப்பாடி கே. பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை:

மதுராந்தகம், தாராபுரம் ஆகிய தனித் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் வரும் அக். 6-ஆம் தேதி நடைபெற உள்ளது. அதிமுக சார்பில் அங்கு வேட்பாளர்களாக போட்டியிட விரும்புவோர் தலைமை அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (செப். 8) முதல் வியாழக்கிழமை (செப். 10) காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். அந்தப் படிவங்களைப் பூர்த்தி செய்து வரும் 10-ஆம் தேதி மாலை 6 மணிக்குள் அதிமுக தலைமை அலுவலகத்தில் வழங்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிமுகவினர் ராஜிநாமா செய்த தொகுதிகள்: கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக சார்பில் மதுராந்தகம் தொகுதியில் மரகதம் குமரவேல், தாராபுரம் தொகுதியில் சத்யபாமா ஆகியோர் போட்டியிட்டு வென்றனர். அவர்கள் தங்களது பேரவை உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்து, தவெகவில் இணைந்தனர். அவர்களைத் தவிர, அதிமுக சார்பில் தேர்தலில் போட்டியிட்டு வென்ற ஜெயக்குமார் (பெருந்துறை), இசக்கி சுப்பையா (அம்பாசமுத்திரம்), வி.விஜயபாஸ்கர் (விராலிமலை), எம்.ஆர்.விஜயபாஸ்கர் (கரூர்) ஆகியோரும் தங்களது பதவியை ராஜிநாமா செய்து தவெகவில் இணைந்தனர்.

கள்ளச்சாராய உயிரிழப்புக்கு காரணமான அதிகாரிகள் மீது நடவடிக்கை தேவை

முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் வலியுறுத்தல்

சென்னை, செப். 8: கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய உயிரிழப்புகளுக்கு காரணமான அதிகாரிகள் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதிமுக மயிலம் சட்டப்பேரவை உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான சி.வி.சண்முகம் வலியுறுத்தினார்.

பேரவையில் அவர் செவ்வாய்க்கிழமை பேசியதாவது:

கடந்த திமுக ஆட்சியில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நிகழ்ந்த கள்ளச்சாராய உயிரிழப்பு குறித்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், அப்போதைய தமிழக காவல் துறை இயக்குநர் (டிஜிபி) சங்கர் ஜிவால் மரக்காணம் கள்ளச்சாராய உயிரிழப்புகள் ஏற்பட்டபோதே மெத்தனால் கடத்தலை தடுக்க வேண்டிய அவசியம் குறித்து உள்துறைச் செயலருக்கு கடிதம் எழுதியுள்ளார். அதன் அடிப்படையில் சென்னையிலிருந்து மெத்தனால் எனும் வேதிப் பொருள் கடத்தப்படுவதைத் தடுக்கவும் அவர் வலியுறுத்தியுள்ளார். ஆனால், அப்போதைய அரசும், அதிகாரிகளும் அதில் கவனம் செலுத்தாமல் அலட்சியமாகச் செயல்பட்டுள்ளனர். எனவே, அலட்சியமாகச் செயல்பட்டு கள்ளச்சாராய உயிரிழப்புக்கு காரணமான அதிகாரிகள் உள்ளிட்டோர் மீது நடவடிக்கை எடுப்பது அவசியம் என்றார்.

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணம்: அதிகாரிகளின் அலட்சியம் காரணம்

ஓய்வு பெற்ற நீதிபதி கோகுல்தாஸ் ஆணையம் அறிக்கை

சென்னை, செப். 8: கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய உயிரிழப்பு சம்பவத்துக்கு அதிகாரிகளின் அலட்சியம் காரணம் என்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட ஓய்வு பெற்ற நீதிபதி கோகுல்தாஸ் ஆணையம் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் மீது மேல்நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறைகளுக்கு பரிந்துரைத்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கடந்த 2024 ஜூன் 19, 20 ஆகிய தேதிகளில் மெத்தனால் கலந்த கள்ளச்சாராயத்தைக் குடித்து 70 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்து ஆய்வு நடத்த முந்தைய திமுக அரசு, ஒரு நபர் விசாரணை ஆணையத்தை அமைத்தது.

பேரவையில் செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்யப்பட்ட இந்த ஆணையத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: மெத்தனால் ஒரு போதைப் பொருள் இல்லை என்றாலும் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. இதைத் தடுக்க மதுவிலக்கு சட்டத்துக்குள் மெத்தனால் தொடர்ந்து இருப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அதிகாரிகள் தொடர் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தால், மெத்தில் ஆல்கஹால் பயன்பாட்டை தடுத்திருக்கலாம்.

மதுவிலக்கு சட்டத்தின் அனைத்து விதிகளையும் அதிகாரிகள் கண்டிப்புடன் செயல்படுத்தினால் கள்ளச்சாராயம் உள்ளிட்ட போதைப் பொருள்களின் அச்சுறுத்தலை ஒழிக்க முடியும். மேலும், மக்கள் நலன் கருதி தமிழகத்தில் மதுவிலக்கை செயல்படுத்த வேண்டும்.

கள்ளச்சாராய விற்பனையாளர்களுக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும் இடையே கேடான கூட்டணி இருந்தது தெரிகிறது. கடமையை செய்யத் தவறிய அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருநபர் விசாரணை ஆணையத்தின் அறிக்கையின் மீது தலைமைச் செயலர் சாய் குமார் அரசாணையை வெளியிட்டுள்ளார்.

அதில், 'கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், கச்சிராயபாளையம், திருக்கோவிலூர் உள்ளிட்ட பகுதிகளில் பணியாற்றிய காவல் உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள், காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க ஆணையம் பரிந்துரைத்துள்ளது. இது தொடர்பாக உரிய மேல்நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அனைத்துத் துறைச் செயலர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரவைக் கூட்டம்: 28 நாள்களில் 32,000 பேர் நேரில் பார்வை

சென்னை, செப். 8: கடந்த 28 நாள்களாக நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத் தொடரை 32,055 பேர் பார்வையாளராக நேரில் வந்து பார்த்துள்ளனர் என பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர் தெரிவித்தார்.

முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இது அதிகம் என்று பேரவைத் தலைவர் பெருமிதம் தெரிவித்தார்.

இது குறித்து பேரவையில் பேசிய அவர், இளைஞர்கள் அரசியலை ஆர்வத்துடன் அறிந்து வருகின்றனர். அதனால்தான் பேரவைக் கூட்டத் தொடரில் 76 பள்ளி, கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள், இளைஞர்கள் நேரடியாக வந்து பார்த்துள்ளனர். கடந்த 2022-ஆம் ஆண்டு 22,651 பேரும், 2023-ஆம் ஆண்டு 20,137 பேரும், 2024-ஆம் ஆண்டு 10,754 பேரும், 2025-ஆம் ஆண்டு 20,123 பேரும் நேரடியாகப் பார்த்துள்ளனர். ஆனால், 2026-ஆம் ஆண்டின் தற்போதைய கூட்டத் தொடரில் கடந்த 28 நாள்களில் 32,055 பேர் நேரில் பார்த்துள்ளனர்.

பொது வாழ்வில் ஈடுபட வேண்டும் என இளைஞர்கள் மத்தியில் ஆர்வம் அதிகரித்துள்ளது என்றார். மேலும், கோப்புகளுக்கு விரைந்து தீர்வு கண்டு, வெளிப்படையாக நடைபெறும் தமிழக அரசை இந்திய அளவில் ஊடகங்களும் பாராட்டி வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

INDEL MONEY

Corporate office: **Indel Money Limited**
IIIrd Floor Indel House, Changampuzha Nagar,
South Kalamassery, Ernakulam -682033
T: 0484-2933999 E:customercare@indelmoney.com

GOLD AUCTION NOTICE

எங்களுடைய பல்வேறு கிளைகளில் அடகு வைக்கப்பட்ட தங்க நகைகள் 09-10-2026 தேதி காலை 11:00 மணிக்கு கீழ கொடுக்கப்பட்டுள்ள கிளையில் வைத்து பகிரங்க ஏலம் விடப்படும் என்பதனை இதன் மூலம் தெரியப்படுத்தி கொள்கிறோம். நகை கடன் பெறாதும் வட்டி செலுத்தாமல் மீட்காமல் விட்ட நகைகளைத்தான் ஏலம் விடுவதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏலத்தில் விடப்படும் கடன் எண்களின் விபரம் அந்தந்த கிளைகளின் அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டுள்ளது. இதற்கு மேல் எந்த அறிவிப்பும் செய்யப்படமாட்டாது.

சிதம்பரம் – 13705130013469, 0513/13490, 0513/13497,

அறிவிக்கப்பட்ட தேதியில் கிளையின் ஏலம் நிறைவடையவில்லை என்றால், Shriram Automall India Limited (SAMIL) மூலம் அவர்களின் ஆன்லைன் இ-ஏல தளமான https://gold.samil.in மற்றும் e-Procurement Technologies Limited (AuctionTiger) மூலம் அவர்களின் ஆன்லைன் இ-ஏல தளமான https://egold.auctiontiger.net வழியாக 12-10-2026 தேதி 12.30 PM முதல் 3.30 PM வரை நடைபெறும். 12-10-2026 தேதி அன்று ஈ-ஏலம் நிறைவடையவில்லை என்றால், அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் அடுத்த வேலை நாட்களில் மீண்டும் ஏலம் விடப்படும்.

இன்டல்மனி லிமிடெட், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

ஆவின் தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,
நாஞ்சிக்கோட்டை சாலை, தஞ்சாவூர் - 613006. தொலைபேசி எண் : 04362 - 255379 E-mail : aavintnj@gmail.com

ந.க.எண்.1099/[illegible]/2026 | மின்னணு ஒப்பந்த அறிவிப்பு | நாள்: 08.09.2026

[illegible] (e-Bid only) [illegible]

பணிகளின் பெயர் மற்றும் விபரம்

1. தஞ்சாவூர் பால் பண்ணை [illegible] - தொழில்நுட்ப டெண்டர் திறப்பு 12.10.2026-11.30 am
2. தஞ்சாவூர் பால் பண்ணையில் [illegible] தொழில்நுட்ப டெண்டர் திறப்பு 12.10.2026-11.30 am
3. தஞ்சாவூர் பால் பண்ணை, [illegible] தொழில்நுட்ப டெண்டர் திறப்பு 12.10.2026 - 11.30 am
4. தஞ்சாவூர் பால் பண்ணையில் [illegible] - தொழில்நுட்ப டெண்டர் திறப்பு 12.10.2026 - 11.30 am
5. தஞ்சாவூர் [illegible] - தொழில்நுட்ப டெண்டர் திறப்பு 12.10.2026-11.30 am

[illegible] www.tntenders.gov.in. [illegible] 10.10.2026 பிற்பகல் 3.00 மணி. [illegible] 18.09.2026 மதியம் 12.30 மணி.

[illegible] (EMD) [illegible]

பொது மேலாளர்,
செ.ம.தொ.இ./2793/ஒப்பந்தப்புள்ளி/2026
தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,

ஞாயிறுதோறும் தினமணியுடன்... கொண்டாட்டம்

TAMIL NADU CIVIL SUPPLIES CORPORATION
(Tamil Nadu Government Undertaking)
Head Office: CMRL Admin Building, Poonamalli High Road,
Koyambedu, Chennai - 600 107. Ph.No. (044) 26426773
Email id. : tncsc.tn@nic.in CIN:U15137TN1972SGC006157

Re e-TENDER NOTICE

Re e-TENDER No. BS4/014388/2026/TNCSC/26-27
Date: 07.09.2026

Online Re e-tender invited for the **'Purchase of 1,07,000 Nos. of 'Y' cone** as per specifications.

Complete Re e-tender document can be viewed and downloaded through **https://tntenders.gov.in/nicgep/app**

The bidders have to participate only online bidding with Digital Signature Certificate (DSC) of Class-II or Class-III.

Last Date and Time for Online Submission : **24.09.2026, up to 11.00 A.M.**

DIPR/2799/Tender/2026

MANAGING DIRECTOR

Karur Vysya Bank

கோட்ட அலுவலகம் விழுப்புரம்
எண்.15, 1வது தளம், G.V.பார்ம்ஸ் பில்டிங்,
மாம்பழப்பட்டு ரோடு, விழுப்புரம்- 605 602
Ph: 04146-229368, E mail: villupuramdo@kvbmail.com

கடன் பெற்றவர்கள் / உத்திரவாதம் அளித்தவர்கள் / அடமானதாரர்களுக்கு அறிவிப்பு

Reg: M/s. சனா மெட்கார்ப் என்ற நிறுவனம் கடன் கணக்கில் உள்ள கடன் தொகையை திரும்ப பெறுவதற்கான பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச்சட்டம் 2002, பிரிவு 13(2) கீழ் அறிவிப்பு.

பெறுநர்,
கடன்தாரர்: 1. M/s. சனா மெட்கார்ப் (Sana Metcorp), (அதன் சார்பாக கூட்டாளி **Mr.சதாம் உசைன் N** மற்றும் **Mr. நாராயணன் V**) எண்.96/2, பெண்டம் ரோடு, விருதாச்சலம், கடலூர் மாவட்டம்-606001. **கூட்டாளிகள்/ஜாமீன்தாரர்கள்: 2.Mr.N.சதாம் உசைன்,** S/o. Mr.நிசாம்தீன், எண்.3, ஜெயில் தெரு, விருதாச்சலம் டவுன், கடலூர் மாவட்டம் - 606001, **3.Mr.V.நாராயணன்,** S/o. Mr. வரதராஜன், எண்.159, கண்ணதாசன் தெரு, பெரியார் நகர் (தெற்கு), விருதாச்சலம் டவுன், கடலூர் மாவட்டம்- 606001.

NPA தேதி: 20.07.2026 | **கிளை: விருதாச்சலம்**

கடன் அளித்த வங்கியில் உள்ள கடன் நிலுவைத்தொகையை திரும்ப செலுத்த நீங்கள் தவறிவிட்டபடியால், செலுத்த வேண்டிய தொகையான ₹ **1,01,35,977.69** (ரூபாய் ஒரு கோடியே ஒரு லட்சத்து முப்பத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஏழு மற்றும் பைசா அறுபத்து ஒன்பது மட்டும்) மற்றும் அதற்கான வட்டி, இதர செலவுகளை திரும்பச் செலுத்துமாறு பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டத்தின் கீழ் **06.08.2026** தேதியிட்ட அறிவிப்பு ஒன்றை அனைவருக்கும் அனுப்பியது. மேலும் இந்த அறிவிப்பின் நகல் எண்.96/2, பெண்டம் ரோடு, விருதாச்சலம், கடலூர் மாவட்டம்-606001 என்னும் முகவரியில் ஒட்டப்பட்டது.

உங்களில் எண்.1-ல் உள்ள நபருக்கு பதிவுத்தபால் / கூரியர் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்புகள் எங்களுக்கு திரும்பி வந்துவிட்டன. எனவே நீங்கள் வங்கிக்கு வந்து அறிவிப்பின் நகலை பெற்று கடன்பாக்கி பற்றிய முழு விவரங்கள், வங்கிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் குறித்து அறிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

மேற்குறிப்பிட்டுள்ள கடன்தொகை மற்றும் 01.08.2026 முதல் திரும்ப செலுத்தும் காலம் வரை வட்டி, இதர செலவுகளுடன் அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் மேற்சொன்ன தொகையை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் கடன் அளித்த வங்கியானது பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டத்தின் படி வங்கி வசம் பிணை/அடமானம் வைத்துள்ள கீழ்க் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை சுவாதீனப்படுத்தும் நடவடிக்கையை வங்கி மேற்கொள்ளும்.

அடமானத்தில் உள்ள சொத்து விவரம்

விருதாச்சலம் பதிவு மாவட்டம், விருதாச்சலம் பதிவு தாலுகா மற்றும் விருதாச்சலம் ஜாயிண்ட் 1 சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட கஸ்பா விருதாச்சலம், **R.S.எண்.380/9, மொத்தமுள்ள 0.54.5 ஏர்ஸ் பரப்பளவுள்ள நிலத்தில் ஏக்கர் 1.35 பரப்பளவுள்ள நிலம், அதிலிருந்து தெற்கு அரைப்பகுதியில் அமைந்துள்ள ஏக்கர் 0.67½ செண்ட் பரப்பளவுள்ள நிலம் (தற்போது வார்டு-E, பிளாக்-118, டவுன் சர்வே எண்.36/10B) மற்றும் TSLR படி: நிலத்தின் பரப்பு 2750 சதுர மீட்டர் அதாவது 29,590 சதுர அடி அதாவது 67.86 செண்ட்.**

(அதிலுள்ள தரைத்தளத்தில் GI ஷீட் ரூப் ஷெட் கட்டிடம் பரப்பு **2100 சதுர அடி** மற்றும் தரைத்தளத்தில் RCC தளம்போட்ட கமர்சியல் கட்டிடம் **1560 சதுர அடி**, அதன் கதவு எண்.96/1 மற்றும் EB சர்வீஸ் இணைப்பு எண்.6914 அதிலுள்ள அனைத்து சர்வீஸ் மற்றும் வசதிகள் போன்றவை)

இடம் : விழுப்புரம்
தேதி : 07.09.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்

equitas SMALL FINANCE BANK

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(Formerly Known as Equitas Finance Ltd)
பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை,
சென்னை , தமிழ்நாடு - 600002 போன் : 044-42995000, 42995050,

அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A யின்படி (விதி 8 (6) யை பார்க்கவும்) - அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **"எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள் மற்றும் வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கள் ஏதேனும் இருப்பின்	நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	மின் ஏல விற்பனைக்கான தேதி மற்றும் நேரம்	கடன் / மொத்த நிலுவைத் தொகை
திரு ரஞ்சித் திருமதி சுபாஷினி இருவரின் முகவரி 99 மெயின் ரோடு V பெத்தநகுப்பம், வானமாதேவி கடலூர், வானமாதேவி B.O - திருச்சி, தமிழ்நாடு - 607105	கடலூர் மாவட்டம், வேலங்கல்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள, 3228 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் கட்டிடம் (புஞ்சை மறு அளவை எண்கள் 139/15, 139/15A மற்றும் பழைய சர்வே எண் 195/7B ஆகியவற்றில் அடங்கியது). இதன் எல்லைகள்: வடக்கு திரு. ஆறுமுகம் அவர்களுக்குச் சொந்தமான நிலம்; தெற்கு திரு. முத்துக்குமரன் அவர்களுக்குச் சொந்தமான நிலம்; கிழக்கு பாதை; மேற்கு திரு. துரைராஜ் அவர்களுக்குச் சொந்தமான நிலம்.	ரூ.14,46,000/- ரூ.1,44,600/- ரூ.10,000/-	15.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SENELLI0467231 / 200001831693 17.04.2026 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.15,29,064/- மேலும் 18.04.2026 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் பிற. (26.08.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.16,66,909/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் 9940286237, ஜெய சூர்யா 7598239524, பாஸ்கரன் 7598239524				
கார்த்திக் T சிவசங்கரி இருவரின் முகவரி 13 நத்தமேடு 3-வது குறுக்குத் தெரு, உருவையாறு மங்கலம் அஞ்சல் , உருவையார் , சுல்தான்பேட்டை B.O-சென்னை மண்டலம், புதுச்சேரி - 605110	புதுச்சேரி மாவட்டம், உருவையார் கிராமத்தில் அமைந்துள்ள, மறு அளவை எண் (R.S. No.) 57/12 (செட்டில்மெண்ட் பதிவின்படி R.S. No. 57/12C மற்றும் Cad No. 274Bis/2pt) ஆகியவற்றில் அடங்கிய, 576 சதுர அடி பரப்பளவுள்ள நிலம் மற்றும் கட்டிடம்.	ரூ.8,07,000/- ரூ.80,700/- ரூ.10,000/-	15.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEMRGPM0466730 / 60000083641 26.06.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.6,26,943/- மேலும் 27.06.2025 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் பிற. (26.08.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.9,01,429/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் 9940286237, அருள் சுதேஷ் 8072257480, பாஸ்கரன் 7598239524				
திரு சின்னதுரை T திருமதி C நாவம்மாள் இருவரின் முகவரி 326 மாரியம்மன் கோயில் தெரு, கடம்பிலியூர் அஞ்சல், மேல்மாம்பட்டு, கடம்புலியூர் S.O- திருச்சி, தமிழ்நாடு - 607103	கடலூர் மாவட்டம், மேல்மாம்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள, புதிய சர்வே எண் 124/4 மற்றும் பழைய சர்வே எண் 172/5ல் அடங்கிய, 1308 சதுர அடி பரப்பளவுள்ள நிலம் மற்றும் கட்டிடம். இதன் எல்லைகள்: தெற்கே திரு. சக்திவிநாயகம் அவர்களுக்குச் சொந்தமான மீதமுள்ள நிலம் மற்றும் சாலை; கிழக்கே திரு. பாலகுமரன் அவர்களுக்குச் சொந்தமான நிலம்; மேற்கே திரு. சக்திவிநாயகம் அவர்களுக்குச் சொந்தமான மீதமுள்ள நிலம்.	ரூ.5,89,000/- ரூ.58,900/- ரூ.10,000/-	15.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். 700011264910 17.04.2026 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.5,22,998/- மேலும் 18.04.2026 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் பிற. (26.08.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.5,75,385/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் 9940286237, சூசைராஜ் 9629818913, பாஸ்கரன் 7598239524				

விருப்பமுள்ள வாங்குபவர்/ஏலதாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No.18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 14.10.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.

மின் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை www. Equitasbank.in & https://www.bankeauctions.com என்ற இணையதளம் மூலம் காணலாம்.

pnb **பஞ்சாப் நேஷனல் வங்கி**
திருவண்ணாமலை கிளை
எண்.11/12, மோதி காம்ப்ளக்ஸ், தேரடி வீதி, திருவண்ணாமலை – 606601, செல்: 9963044164

நகை கடன் ஏல அறிவிப்பு

எங்களது வங்கியில் நகைக்கடன் பெற்றுள்ள கீழ்க்கண்ட நபருக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள நகைக்கடன் தொகை, தவணை கடந்து நெடுநாட்களாகியும் கடன் தொகையினை செலுத்தி நகைகளை திரும்பப்பெறவில்லை. ஏல நோட்டீஸ்கள் கீழ்க்கண்ட நபரின் முகவரிக்கு பதிவுத்தபாலில் வங்கி அனுப்பியது.

எனவே, இந்த விளம்பரம் கண்டவுடன் அசல், வட்டி மற்றும் இதர செலவுகளையும் சேர்த்து 15.09.2026 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ மதியம் 2.00 மணிக்குள் திருப்பிவிட வேண்டும். தவறினால் கடனிற்கு ஈடாக வைக்கப்பட்டுள்ள நகைகளை கடன் பெற்றவரின் செலவிலேயே 15.09.2026–ம் தேதி பிற்பகல் 3.00 மணியளவில் வங்கி அலுவலகத்தில் வைத்து கிளை மேலாளர் அவர்களால் பொதுமக்கள் முன்னிலையில் பகிரங்க ஏலம் விடப்படும் அல்லது நிர்வாகத்தின் சௌகரியம் போல் மறு ஏல அறிவிப்பு ஏதுமின்றி வேறு தேதியில் ஏலம் விடப்படும் என்றும் இதன் வாயிலாக அறிவிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கையை மாற்றவோ, ஒத்தி வைக்கவோ கிளை மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். ஏல நிபந்தனைகளை வங்கியின் அறிவிப்பு பலகையில் காணலாம். கீழ்காணும் கடன் பெற்றுள்ள கடன்தாரர்களுக்கு கடன் தொகையை முழுவதும் செலுத்த தவறும் பட்சத்தில் இதுவே ஏல விற்பனை மேற்கண்ட தேதி, நேரத்தில் நடத்தப்படுவது தொடர்பான அறிவிப்பாகும்.

கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி	கடன் எண்	கடன் நிலுவை தொகை	எடை கிராமில்
சுரேஷ்குமார் நாகரத்தினம், த/பெ. நாகரத்தினம், எண்.25, 3வது தெரு, அருணகிரிபுரம், சரோன் திருவண்ணாமலை, தமிழ்நாடு–606601.	608000PA00187850	171000	18.2

இடம் : திருவண்ணாமலை
தேதி : 09.09.2026

கிளை மேலாளர்
பஞ்சாப் நேஷனல் வங்கி, திருவண்ணாமலை

ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் இளமை! புதுமை! இனிமை!